# இலங்கையில் யுத்தத்தின் பின்னரான பொருளாதார நெருக்கடியின் மத்தியில் வாழ்வாதாரமும் அபிவிருத்தியும்: மட்டக்களப்பு உறுகாமத்தை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு

# Livelihood and Development in the Post-War Economic Crisis of Srilanka: A Sociological Analysis Based on Batticaloa Rugam Area 2022

Sathiyasegar Kandasamy
*Senior Lecturer in Sociology and Anthropology*
*Eastern University, Sri Lanka*

**Abstract**

*After 13 years of end of civil war, Covid – 19 pandemic issues and the present economic crisis have made the country in a pathetic social condition. Even though the research problem is broadened, this research area is mainly focuses on the Batticaloa, in the Eastern part of Sri Lankan. There are many problems prevailing in livelihoods and development. To identify those livelihood issues and challenges are the main objective of this study. This is a descriptive sociological study and livelihoods related variables haveanalyzed and measured mainly focused with qualitative methodology (Sarantakos.S, 1993). It had identified mainly secondary sourcesfor the data and observation and discussion methods have used for primary data of this study. It is also incorporating research journals, articles and various reports and includes news from both the printed and soft versions E-news, are of available in the mass media. And also, someof the statements from valuable reports and distinguishing people in both the Tamil and English languages have used. Based on the analysis, the research findings, shows that the expectations, beliefs, livelihoods and development of the people of this area have affected. The main livelihoods such as agriculture and fishing nitches have severely affected and small industries also weakening based on the current economic crisis. The vulnerable people have facing sever challenges for their living and livelihoods and development.*

**Keywords:** *Livlihood, Poverty, vulnerable Postwar, development*

**ஆய்வுச்சுருக்கம்**

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து சுமார் 13 ஆண்டுகள் கடந்ததன் பின்னர்,Covid – 19 தொற்றுநோய் சிக்கல்கள் மறறும் சமகால பொருளாதார நெருக்கடிகளினால் இலங்கை ஒரு நோய்நிலைப்பட்ட சமூகமாக காட்சியளிக்கின்றது. மட்டக்களப்பு மக்களின் வாழ்க்கைத்தரமும், வாழ்வாதார அபிவிருத்தியும் குறைவான நிலையிலுள்ளது. எனும் ஆய்வுப்பிரச்சினையினை மையமாகக் கொண்டு அவற்றுக்கான பிரச்சினைகளையும் சவால்களையும் அடையாளம் காண்பதனை பிரதான நோக்கமாக கொண்டுள்ளது. வாழ்வாதாரம் தொடர்பான மாறிகள் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு, பண்புரீதியான முறைமையியலினடிப்படையில் ஒரு விளக்க ஆய்வாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. முதன்மைத் தரவுகளுக்காக அவதானிப்பு மற்றும் கலந்துரையாடல் முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளுக்காக ஆய்விதழ்கள், கட்டுரைகள், அறிக்கைகள் மற்றும் செய்திக்குறிப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுதரவுப்பகுப்பாய்வு முடிவுகளின்படி மக்களின் எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வாழ்வாதார அபிவிருத்தியும் குறைந்துள்ளது. சமகால பொருளாதார



© 2022, IRJTSR 

நெருக்கடியினால் இப்பகுதியின் முக்கிய வாழ்வாதாரமான விவசாயமும் மீனபிடியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சிறுகைத்தொழில் நடவடிக்கைகளும் நலிவடைந்து வருகின்றன. இதனால் இலகுவில் தாக்கத்திற்குட்படக்கூடிய மக்கள் வாழ்வதற்காகவும்,வாழ்வாதாரம் மற்றும் அபிவிருத்திக்காகவும் கடுமையான சவால்களை எதிர்கொள்கின்றனர்.

**திறவுச் சொற்கள்:** வாழ்வாதாரம், வறுமை, பாதிப்பு, யுத்தம், அபிவிருத்தி

## 1. ஆய்வு அறிமுகம்

உலக நாடுகளில் இன்று பல்வகை சமூகப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதிலும் முக்கியமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேஅதிகளவில் சமூகப் பிரச்சினைகள் உருவாகியும் கூர்மையாக்கப்பட்டுமுள்ளன. இலங்கையும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றது. இங்கு முக்கியமானதொரு பிரச்சினையாக காணப்படுவது உள்நாட்டு யுத்தமும் அதன் விளைவுகளுமாகும். மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் நேரடியாக வடகிழக்கு பகுதிகள் பாதிக்கப்பட்டன. 2009ஆம் ஆண்டு முடிவுபெற்ற யுத்தத்தினைத் தொடர்ந்து,சுமார் 13 வருடங்கள் முடிவடைந்த நிலையிலும்,மட்டக்களப்பு உறுகாம மக்களின் வாழ்க்கைத்தரமும், வாழ்வாதார அபிவிருத்தியும் குறைவான நிலையிலுள்ளது.“வாழ்க்கைத்தரம் என்பது மக்களின் சமூக, பொருளாதார மற்றும் சூழல் நலன்களில் விருத்தி ஏற்படுவதாகும்.”(Godfrey , 2002 and M.T.M Rizvi, 2021).

ஒரு சமுதாயம் அபிவிருத்தி அடைவதற்கும் முன்னோக்கி நகர்வதற்கும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்படுவதுடன்,இயற்கை, சமூக, பௌதீக, மனித மற்றும் நிதி ஆகிய ஐந்து மூலதனங்களினூடான வாழ்வாதார விருத்தியும் உறுதுணையாக அமைவது அவசியமானதாகும்.(Frank Ellis, 2000)பொருளாதாரவபிவிருத்தி, சமூகவபிவிருத்தி, வாழ்வாதாரவபிவிருத்தி அணுகுமுறைகளை கருத்திற்கொண்டு ஒரு சமூகத்தின் அபிவிருத்தியை அளவிட வேண்டும் என்பதற்கிணங்கவளப்பயன்பாட்டின் தன்மையினையும், வளங்கள் முழுமையாக பயன்னடுத்தாமலிருப்பதற்கான காரணங்களையும், வளப்பயன்பாட்டிற்கான தேவையினையும், அதற்கான உபாயங்களையும் மையப்படுத்தியதாக யுத்தத்திற்குப் பின்னரான சமூகப்பிரச்சினைகளும், வாழ்வாதார அபிவிருத்தியும் என்பதனை அடிப்படையாகக் கொண்டுசமூக, பொருளாதார, அரசியல்,அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக இவ்வாய்வு ஆழமாக ஆராய்ந்துள்ளது.

## 2. ஆய்வுப்பிரச்சினை(Research Problem)

எந்தவொரு ஆய்வும் பிரச்சினையிலேயே ஆரம்பிக்கிறது. உள்நாட்டு யுத்தத்தில் நேரடியாக பாதிக்கப்பட்ட பகுதிகள் யுத்தம் முடிவடைந்து சுமார் 13 வருடங்கள் முடிவடைந்த நிலையிலும்,சமகால பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவும் மட்டக்களப்பு உறுகாமமக்களின் வாழ்க்கைத்தரமும், வாழ்வாதார அபிவிருத்தியும் குறிப்பாக விவசாயம் மற்றும் மீன்பிடி என்பன பாதிப்புக்களுக்குட்பட்டு பின்தங்கிய நிலையிலுள்ளதுஎன்பது ஆய்வுப்பிரச்சினையாகவுள்ளது.

## 3.ஆய்வுக்கருதுகோள் (Research Problem)

உள்நாட்டு யுத்தத்தால் உடல், உள, சமூகப்பொருளாதார, அரசியல், பண்பாட்டு ரீதியாகப் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு உறுகாமமக்கள் யுத்தம் முடிவடைந்து 13 வருடங்களின் பின்னரும் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் சமுதாயப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல்என்பதும் அதனால் அம்மக்களின் வாழ்க்கைத்தரமும் குறைவடைந்த நிலையிலுள்ளது என்பதும்இவ்ஆய்வுக்குரிய கருதுகோளாக(அருள்மொழி.செ, 2008). முன்வைக்கப்பட்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

## 4. ஆய்வு நோக்கங்கள் (Research Objectives)

இவ்வாய்வின் நோக்கங்கள் (நந்தகுமார்.வை, 2008),பொது நோக்கங்கள் (General Objectives)மற்றும் சிறப்பு நோக்கங்கள் (Specific Objectives)என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 4.1 பொது நோக்கம்

ஆய்வுப் பிரதேசத்தில் யுத்தத்திற்குப் பின்னரான மக்களின் வாழ்வியல் நிலைமைகளையும், பிரச்சினைகளையும், வாழ்வாதார அபிவிருத்தியையும் பற்றி கண்டறிதல்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2022, IRJTSR

**4.2 சிறப்பு நோக்கங்கள்**


- யுத்தத்தில் நேரடியாக தொடர்புபட்டதால் ஏற்பட்ட யுத்த பாதிப்புக்களையும், யுத்தம் முடிவடைந்த பின்னர் சமகால வாழ்வாதார நிலைமைகள் பற்றி தெளிவாக அறிந்து கொள்ளல்.
- யுத்தத்திற்குப் பின்னர் அதிகரித்துவரும் பிறழ்வுநடத்தைகளுக்கான[1] காரணங்களை கண்டறிதல்
- போருக்குப் பின்னரான வாழ்வாதார அபிவிருத்திக்கு தடையாகவுள்ள அரசியல்[2], பொருளாதார[3] காரணிகளை கண்டறிதல்.

போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு யுத்தத்திற்குப் பின்னரான ஆய்வுப்பிரதேசத்தின் சமுதாய நிலைமைகள், சமகால வறுமை, வாழ்வாதாரம், அபிவிருத்தி நிலைமைகள் பற்றியும்,சமூகவியல் அணுகுமுறைக்கூடாக, ஆய்வு செய்து உண்மைகளைக் கண்டறிந்துள்ளது.

## 5. பகுப்பய்வும் கலந்துரையாடலும் (Results and Discussions)

### 5.1 ஆய்வுப் பிரதேசமும் சமூகப்பின்னணியும்:

**ஆய்வுப் பிரதேச வரைபடம்**




Source: DMC. 2020, Administrative map of Batticaloa district of Sri Lanka.

இப்பிரதேசத்தில் உள்ள மக்கள் சமூகப்பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்திற்காகபெரும்பாலும் மீன்பிடி மற்றும் விவசாயத்தில் தங்கியுள்ளனர். இங்குள்ள உறுகாமக்குளம் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெரும் பங்களிக்கின்றது. குறிப்பாக விவசாயத்திற்கான நீர்ப்பாசனம், கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை மற்றும் மீன்பிடித்தொழிலுக்கான மூலாதாரமாக இக்குளம் காணப்படுகின்றது. இக்குளத்தின் நீர்மட்டம் குறைகின்ற போது இப்பகுதி மக்களின் வாழ்வாதாரச் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன.

**அட்டவனை1 : குடும்ப ரீதியிலான சனத்தொகை பற்றிய விபரம்**

| மொத்தகுடும்பங்கள் | 294 | | மொத்த சனத்தொகை | 912 | |
|---|---|---|---|---|---|
| 294 | ஆண்தலைமைக்குடும்பங்கள<br>248 | பெண்தலைமைக்குடும்பங்கள<br>46 | 912 | ஆண்<br>448 | பெண்<br>464 |

[1]தற்கொலை, போதைப்பொருள் பாவனை, பாலியல் துஸ்பிரயோகம்
[2]அரசாங்கங்களின் நிலைப்பாடுகள், அரசியல்வாதிகளின் செயற்பாடுகள்,
[3]குடும்ப வருமானம், வாழ்க்கைச்செலவு, தொழில்வாய்ப்பு, தங்கியிருத்தல், வறுமை, நுண்கடன்

மூலம்: (ஏறாவூர்பற்று பிரதேச புள்ளிவிபர அறிக்கை 2021).

மேற்கண்டவாறு குடும்ப ரீதியிலான சனத்தொகை பற்றிய தகவல்களுக்கூடாக இப்பகுதி மக்கள் யுத்தம், இடப்பெயர்வு,என்பனவற்றினால்வறுமை, வேலையின்மை, பொருளாதார பற்றாக்குறை,மற்றும் நுண்கடன் பிரச்சினைகள்என்பனவற்றுக்கு காரணமாகியுள்ளனர் என்பதனைக் கண்டறிய முடிந்தது.

குடும்பச் சிதைவும் கைவிடப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. பெண்கள்மற்றும் சிறுவர்களின கல்வி, சுகாதாரம் குறைவாக காணப்படுதல்,உளநல வீழ்ச்சி,இதனால் போதைப்பொருள் பாவனை,பாலியல் துஸ்பிரயோகம்,பாடசாலை இடைவிலகல்(சின்னத்தம்பி.க, 2007), சிறுவர்தொழிலாளர் அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது. தற்கொலைகள்,விபத்துக்களில் உயிரிழப்புக்கள், உடல் ஊனமுறுதலும் அதிகரித்துள்ளது.

சமூகக் கூறுகள், தோற்றப்பாடுகள், நிகழ்வுகள் என்பவற்றில் ஏற்படுகின்ற இவ்வாறான முரண்பாடுகளின் மூலமாக சமூகப்பிறழ்வான நடத்தைகள் உருவாகுமாயின் அது பின்னடைவான சமூக நிலைமைகளுக்கும் அதுசார்ந்த சமுதாய மாற்றங்களுக்கும் காரணமாக அமைவதுடன்,சமுதாய ஒழுங்கில் சீர்குலைவுக்கும், சமூகப் பிரச்சினைகளுக்கும் அடித்தளமாக அமையும் இந்நிலைமை வாழ்வாதார அபிவிருத்திக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் தடையானதாகும். இவை தொடர்பான அனைத்து விடயங்களையும் ஆய்வுப் பிரதேசத்தில் பூரணமாகவும் தெளிவாகவும் இவ்வாய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

சுனாமி, அதிகமழை, வெள்ளப்பெருக்கு, சூறாவளி, வறட்சி போன்ற பல இயற்கையான அனர்த்தங்களினாலும் இம்மக்கள் பாதிக்கப்பட்டமையும் அவற்றின் நீட்சியும் மென்மேலும் பற்பல சமூப் பிரச்சினைகளைத் தோற்றுவித்த வண்ணமே உள்ளன."சமூகவியல் பகுப்பாய்வில் கோட்பாட்டின் ஒவ்வொரு விடயங்களும் அது தொடர்பான சிறப்பான ஆய்வுக்கு பங்களிக்கின்றன. அவற்றை வரையறை செய்வதில் தொடர்ச்சியான பல ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன"(றொபின்சன்.அ, 2006,).

வளங்கள் பற்றாக்குறையும் குறைவளப்பயன்பாடும் வாழ்வாதார நிலைமைகளை மேலும் பாதித்து பிரச்சினைகளை கூர்மைப்படுத்துகின்றன. இதனால் சமூக ஒழுங்கு சீர்குலைவதுடன் குறித்த பிரதேச மக்களின் சாதாரண இயல்பான வாழ்வையும், வாழ்வாதார வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. எனவே இவை தொடர்பாக மேலதிக கவனமெடுத்து, அவற்றைக் குறைத்தல், இழிவளவாக்குதல் அல்லது இல்லாமல் செய்யவேண்டிய தேவையுமுள்ளது.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் இடம்பெற்று முடிந்த உள்நாட்டு யுத்தத்தில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதி மக்கள் பலபாதிப்புக்களை எதிர்கொண்டனர். இம்மக்களது எதிர்பார்ப்புக்கள், நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், விருப்பங்கள், ஆர்வங்கள் மற்றும் அபிலாசைகள் என்பன முக்கியமானவை. உயிர்களை,உடலுறுப்புக்களை,உறவுகளை, உடைமைகளை, சொத்துக்களை இழந்தவர்கள், போராளிகளாக இருந்து தற்போது சமுதாயத்தில் இணைந்தவர்கள், கணவனையிழந்த பெண்கள்,ஆகிய இம்மக்களின் அன்றாட வாழ்வியல் அம்சங்கள் குறிப்பாக சமூக, பொருளாதார, விடயங்கள்அதிகம் பாதிப்படைந்து வறுமைக்குட்பட்டு அபிவிருத்தியிலும் பின்தங்கியுள்ளனர்.

உடல், உள, கல்வி, சமூகப்பொருளாதார, அரசியல், பண்பாட்டு ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களின் பல பிரச்சினைகள் யுத்தத்தின் பின்னரும் தொடர்கின்றன.வறுமை, தொழிலின்மை,சமுதாய வளர்ச்சி, அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கியமை, குறைவான உட்கட்டமைப்பு வசதிகள்போன்ற பல காரணங்கள் இம்மக்களை மேலும் பின்தங்கிய நிலைக்குள்ளாக்கியுள்ளன.

**அட்டவனை 2 : சமய, பால்நிலை ரீதியான சனத்தொகை விபரம்**

| தமிழர்கள் | | முஸ்லீம்கள் | | இந்து | இஸ்லாம் | கிறிஸ்தவம் |
|---|---|---|---|---|---|---|
| ஆண் | பெண் | ஆண் | பெண் | | | |
| 396 | 403 | 52 | 61 | 764 | 113 | 35 |

மூலம்: (ஏறாவூர்பற்று பிரதேச புள்ளிவிபர அறிக்கை 2021).

மட்டக்களப்பின் உறுகாமத்தில் காணப்படுகின்ற மக்களின் சமய, பால்நிலை ரீதியான சனத்தொகை விபரம் மேற்கண்டவாறு காணப்படுகின்றது.இலங்கையின் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் வாழும் தமிம் முஸ்லிம் சமுதாயத்தினர் யுத்த காலங்களிலும், யுத்தம் முடிவடைந்த காலங்களிலும் பல்வேறு பாதிப்புக்களுக்கும், தாக்கங்களுக்கும் உட்பட்டனர். அதிலும் குறிப்பாகமட்டக்களப்பு உறுகாம மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் பாதிப்புக்களுக்கு உட்பட்டுள்ளன. விவசாயம் மற்றும் மீன்பிடிசார்ந்த வாழ்வாதார நடவடிக்கைகளில் இம்மக்கள் ஈடுபடுவது குறைவடைந்துள்ளது. மேலும் பெண்களது பங்களிப்புகளும் வாழ்வாதார செயற்பாடுகளில் குறைவடைந்துள்ளதனையும் அறிந்து கொள்ள முடிந்தது. நேரடியாக இப்பகுதி மக்கள் அதிக யுத்தப்பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்டதும்,தொடர்ந்து கொன்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளும்இதற்கான காரணங்களாக குறிப்பிட்டனர்.

பெரும்பான்மையை மையமாகக் கொண்ட அரசாங்கங்களினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்கள் சமூக, அரசியல், பொருளாதார, மற்றும் கலாசார ரீதியாக இன்மைப்படுத்தப்பட்டும், ஓரங்கட்டல்களுக்கு உட்படுத்தப்பட்டும், சமுதாய ரீதியில் பின்தள்ளப்பட்டுமுள்ளனர். இவ்வாறான நிலைமைகளுக்கு அரசியல் ரீதியிலான பலகாரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருந்துள்ளதுடன் தற்போதும் அவ்வாறான நிலைமைகள் தொடர்கின்றதனை இவ்வாய்வின் மூலம் அறியமுடிந்தது.

பெரும்பான்மை இன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசாங்கங்கள் சிறுபான்மை இன மக்களைப் பேணிப் பாதுகாப்பதுடன், அம்மக்களை இன, மத, மொழி மற்றும் வர்க்க பேதங்களுக்கப்பால் சமத்துவமாக நடாத்த வேண்டியது ஆட்சியிலிருக்கின்ற அரசாங்கங்களின் பொறுப்பும் கடைமையுமாகும். அவ்வாறில்லாமல் பாதிப்புக்களுக்கு உட்பட்ட ஒரு சமுதாயத்தினரை பாரபட்சமாக நடத்துவது அம்மக்களை மேலும் பாதித்து நலிவடையச் செய்வதுடன் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியிலும் பின்தள்ளி விடுகின்றது.

இவ்வாய்வின் மூலம்ஆய்வுப்பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் குறைவான நிலையில் காணப்படுகின்றன என்பதையும், அவை குறைவாக இருக்கின்றமையால் வாழ்வாதார அபிவிருத்தியில் ஏற்படுகின்ற தாக்கங்களையும் இனங்காண முடிந்தது.அடிக்கட்டுமான வசதிகளான கல்வி, சுகாதாரம், மருத்துவம், குடிநீர், வீட்டுவசதிகள், மலசலகூட வசதிகள், போக்குவரத்து,வீதிவசதிகள்,தொடர்பாடல், தபாலக வசதிகள், சந்தை, மைதானம், தொழற்சாலைகள்,சமய அனுட்டானங்களுக்கான இடங்கள்,பொதுக்கட்டிடங்கள், முதியோர் இல்லங்கள், சிறுவர் காப்பகங்கள், போன்ற இன்னோரன்ன அடிப்படை வசதிகள் தொடர்பான நிலைமைகளையும் அவை போதாமையுள்ளதனையும்அறியமுடிந்தது.

### 5.2 விவசாயம் மற்றும் மீன்பிடிசார் வாழ்வாதாரம்:

ஒரு சமூகத்தினுடைய அனைத்து செயற்பாடுகளுக்கும் பொருளாதாரநடவடிக்கைகள் இன்றியமையாதவையாகும். ஆய்வுப் பிரதேசத்தில் விவசாயமும் மீன்பிடியும் பிரதானவாழ்வாதாரங்களாகும். குடிசைக்கைத்தொழில் சிறயளவில் காணப்படுகின்றன. இங்கு அதிகளவில் ஆணகளும் பெண்களும் வேலைவாய்ப்பிற்காக மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்கின்றனர். குறிப்பிட்ட இப்பிரதேசத்தில் யுத்தம் காரணமாக ஏற்பட்ட பாரிய இழப்பாகப் பொருளாதார ரீதியான இழப்புக்கள் காணப்படுகின்றன. பொருளாதார ரீதியான இழப்பிற்கான காரணமாக போரினயல்ஏற்பட்ட இடப்பெயர்வு, சொத்திழப்பு, உயிர்களின் இழப்பு, அங்கவீனமான நிலமை போன்றவையும் அதன்காரணமாக பொருளாதார ரீதியான பின்னடைவும் ஏற்பட்டுள்ளது.உள்நாட்டு யுத்தத்தின் தாக்கங்களால் பாதிக்கப்பட்ட சமுதாயங்களின் வாழ்வாதாரம் பிரச்சினையாக உள்ளதுடன், இவர்கள் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியும், இலகுவில் பாதிப்புக்களுக்கு உட்படக் கூடியவர்களாகவும் உள்ளனா(Suresh Kanesh and Mumthaj Sameem,2018).

ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் தொழில் ரீதியான இழப்பானது பிரதானமானதாகக் காணப்படுகின்றது. குறிப்பாகத் தொழில் ரீதியான இழப்புக்களில் விவசாயத்தினை மேற்கொள்வதற்குத் தேவையான நீர்வசதிகள் குறிப்பாக ஆறுகள், குளங்கள், வாவிகள், வாய்க்கால்கள் என்பன பூரணமாக அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பதனை தெளிவாக இனங்கண்டுகொள்ள முடிந்தது.உபகரணங்களின் இழப்புக்கள், கால்நடைகளின் அழிவு, பயிர்களின் அழிவு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும்,COVID- 19 தொற்றுநோயின் காரணமும், அண்மைக்காலமாக இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார சிக்கல்களினாலும் தொழில் ரீதியான இழப்புக்களை இம்மக்கள் விவசாயத்திலும் மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பிலும் சந்திக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

யுத்தத்தினால் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதார, வாழ்வாதார நிலைமைகள், மற்றும் அவர்களுக்கு இருக்கக்கூடியதான தொழில் வாய்ப்புக்கள், சீவனோபாயத்தை மீள்கட்டி எழுப்புவதற்கான சந்தர்ப்பங்கள், போன்றன பற்றிய தெளிவான விளக்கங்களை பெற்றுக் கொள்ள முடிந்தது.ஒருவர் யுத்தம்

காரணமாக உயிரிழக்கும் போதும் அல்லது அங்கவீனமடையும் போதும் அக்குடும்பத்தில் பிரதானமாகத் தொழிலை மேற்கொள்ளும் குடும்ப உறுப்பினர் இன்றி அக்குடும்பத்தினுடைய பொருளாதாரமானது கேள்விக்குறியாகியிருந்தது.ஒப்பிட்டு ரீதியாகப் பார்த்தோமானால் யுத்தத்தின் பின்னர் கூலித்தொழிலாளர்கள் அதிகரித்துள்ளமையும் விவசாய நடவடிக்கையானது ஆரம்பத்தில் இருந்ததை விட யுத்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்டிருந்த குடும்பங்களின் வாழ்வாதாரமானது குறிப்பாக COVID- 19 சிக்கல்கள், சமகால அரசியல்சிக்கல்களினாலும் பொருளாதார நெருக்கடிகளினாலும்பாதிக்கப்பட்டு வீழ்ச்சியடைந்துள்ளது(Korf and Silva 2003) என்பதனையும் அறியமுடிகின்றது.

விவசாயத்துறையானது உள்ளீடுகளுக்கான கட்டுப்பாடுகள், குறிப்பாக பசளைகள், உரம், கிருமிநாசினிகள் மற்றும் பூச்சிநாசினிகள் போன்றவற்றுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடுகள், எரிபொருளுக்கான தட்டுப்பாடுகள் என்பன விவசாய உற்பத்திகளை கணிசமானளவு குறைவடையச் செய்திருந்தது. மேலும் சந்தைப்படுத்தல் பிரச்சினைகள், நிறுவன ரீதியான உதவிகள் போதாமை, நவீன தொழில் நுட்பத்தின் கிடைப்பனவு போதாமை போன்ற பிரச்சினைகளால் விவசாயத்துறை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாக விவசாயத்தின்மூலம் பெறும் வருமானமானது ஆரம்பத்தில் இருந்ததை விட வீழ்ச்சியுற்றுச் சென்றுள்ளமையை ஆய்வின் மூலம் அறிய முடிந்தது..

**5.3 ஆய்வுப் பிரதேசத்தின் பொருளாதார நிலைமை**

பொருளாதார ரீதியான பிரச்சினைகள் பற்றி நோக்குமிடத்து, வேலையின்மை, வருமானம் போதாமை மற்றும் ஏழ்மை போன்றன மக்களை அதிகம் பாதிப்பதாக உள்ளது. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களுள் பெரும்பாலானோர் வேலையற்வர்களாக காணப்படுகின்றனர். அதாவது தொழிலுக்கான முதலீடு இன்மை, ஆய்வுப் பிரதேசத்தில் தொழிற் கூடங்கள் அதிகம் இன்மை, விவசாயத்திற்கான முதலீடுகள் இன்மை போன்றன இதற்கு காரணமாக உள்ளது. அதிக மக்கள் நிரந்தர தொழிலற்றவர்களாக வாழ்வதனால் போதிய வருமாத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது வறுமையில் உள்ளனர். குறைந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்வதனால், மக்கள் தமது விருப்பிற்கேற்ப உணவு, உடை, உறைவிடம், சுகாதாரம் மற்றும் பிள்ளைகளது கற்றல் செயற்பாடுகள் போன்றவற்றைமுழுமையாக பூர்த்திசெய்துகொள்ள முடியாமல் ஏழ்மைக்குள் தள்ளப்பட்டுள்ளதனை அறிந்து கொள்ள முடிந்தது.

ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள மீனவர்கள் சொந்தமாக தொழில் செய்ய முடியாத சூழலைக் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இம்மீனவர்கள் சொந்தமாக தொழில் செய்தால் தமது வருமானத்தை உயர்த்தலாம் எனும் எண்ணம் கொண்டிருந்தாலும் அவர்களுடைய நிதிவசதியானது மீனவர்கள் சொந்தமாக தொழில் செய்ய முடியாமல் இருப்பதற்கு காரணமாக உள்ளது.

சொந்தமாக தொழில் செய்ய முடியாத காரணத்தினால் மீனவர்களால் கூடுதலான வருமானத்தை பெறமுடியாதுள்ளது. கூடுதலான வருமானம் கிடைக்கப்பெறாமையால் மீனவர்கள் வறுமைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள் இவ்வறுமை நிலையினால் மீனவர்களால் அவர்களுடைய வாழ்வாதாரத்தை பெருக்கவும் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாதுள்ளது.

> *A (வயது 38) நபர் குறிப்பிடுகையில் மீன்புடிச்சு கிடைக்கும் வருமானம் அண்டை அண்டைய செலவுக்கே சரியா இருக்கு சில நாளையில அந்தக்காசும் செலவுக்கு பத்தாது பக்கத்து வீட்டில கடன் வாங்குறதும்தான்இப்படியே போகுது''*

> *B (வயது 45) நபர் குறிப்பிடுகையில் அவரு மீன புடிச்சு வித்துற்று வார காசி 1000 ரூபாய்க்குள்ளதான் எப்பவும் இருக்கும் அந்த காசிலதான் சாப்பாடு, உடை, வகுப்புக்கும் குடுக்கனும்*

ஆய்வுக்குட்படுத்திய பிரதேசத்தில் மீன்பிடி தொடர்பான போதியளவான பயிற்சிகள் வழங்கப்படவில்லை. இதனால் இவர்கள் பாரம்பரிய முறைகளிலேயே அதிகளவில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். அத்துடன் மீன்பிடி தொடர்பான பயிற்சி வழங்கல் விடயங்களில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்களது பங்களிப்பினை போதியளவில் வழங்கவில்லை என்றும் குறிப்பிட்டனர். இவ்வாறான பயிற்சி வழங்குவதால் தங்களதுமீன்பிடியை அதிகரித்து வருமானத்தையும் உயர்த்த முடியும் எனவும் மீனவர்கள் தங்களது கருத்தை முன்வைத்திருந்தனர்.

அத்துடன் இவர்கள் சொந்தமாக மீன்பிடி தொழில் செய்வதில் போதிய நிதி வசதியின்மை என சிலர் குறிப்பிட்டிருந்தனர். சிலர் போதிய நிதி வசதி இருந்தாலும் மீன்பிடி தொழில் புரிவதற்கான இடவசதியின்மை எனக் குறிப்பிட்டிருந்தனர். இன்னும் சிலர் நவீனமீன்பிடி உபகரணங்களை கையாள்வதில் உள்ள பிரச்சினைகள் பற்றியும்குறிப்பிட்டிருந்தனர். இவ்வாறாக மீன்பிடி தொழில்சார் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பதும் இப்பிரதேசத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் மூலமாக அறியமுடிந்தது.

மீன்பிடி தொடர்பான மீனவர்களின் தொழில் அனுபவமானது மனித மூலதனத்தில் முக்கிய விடயமாக அமைகின்றது. இதன்படி இங்கு மீனவர்களின் தொழில் அநுபவமானது பூரணதிருப்தி நிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதாக அமைகின்றது. எனினும் இவர்கள் மீன்பிடியோடு தொடர்புடைய கருவாடு உலர்த்துதல், வலை பின்னுதல், மீன்பிடிச்சாதனங்களை திருத்துதல் போன்ற ஏனைய தொழில்களில் ஈடுபடுதல் மூலம் இப்பிரதேசத்தில் மீனவமக்களின் வருமானத்தினை அதிகரிக்கமுடியும் என்பதனையும் அறிந்து கொள்ள முடிந்தது.
சமூக மூலதனம் தொடர்பான விடயங்களை நோக்குகின்ற போது மீனவர்கள் தங்களுக்குள் மேற்கொள்கின்ற தொடர்பாடல்கள், வியாபார நுட்பங்கள் மற்றும் தந்திரோபாயங்கள், மக்கள் தங்களது பொருட்களை விற்பனை செய்வதற்கான கலந்துரையாடல்கள் போன்றன மீனவர்களது வருமானத்தில் முக்கிய தாக்கம் செலுத்தும் விடயங்களாகக் காணப்படுகின்றன. அனடிப்படையில் மீனவசங்கங்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினது பங்களிப்புக்கள் இதில் முக்கியமானதாக உள்ளது.இதன்படி இப்பிரதேசத்தில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினது பங்களிப்பினைப் பொறுத்தவரை ஓரளவு திருப்தி நிலை காணப்படினும் மீனவ சங்கங்கள் தொடர்பில் மக்கள் வேறுபட்ட கருத்து நிலையை கொண்டிருப்பதனையும், அவை முழுமையாக செயற்படாமல் காணப்படுகின்ற தன்மையையும் அவதானிக்க கூடியதாகவுள்ளது.

ஒரு குறிப்பிட்ட தொழிலை சமூகத்திலுள்ள அநேகமானோர் ஒன்று சேர்ந்து செய்யும் போது சமூகரீதியான ஓர் கூட்டுறவு தானாகவே ஏற்படும். இதன் மூலமாக சமூக அமைப்புக்கள், குழுக்கள் என்பன தோற்றம் பெறுவதுடன், இவ்வாறு சமூகரீதியான ஒரு வேண்டுகோளை விடுக்கின்ற போது சம்மந்தப்பட்ட தரப்பினர் அச்சமூகத்தின் கோரிக்கைக்கு செவி சாய்க்கக் கூடிய ஒரு நிலமை காணப்படும். இதன்மூலம் சமூகத்தில் காணப்படும் தேவைகளையும் குறைபாடுகளையும் அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிதாகவும் இருக்கும். கிராமங்களில் மீனவசங்கங்கள் மற்றும் விவசாய அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருத்தாலும் இவை சிறப்பாக இயங்காமையை ஆய்வின் மூலமாகக் கண்டறியமுடிந்தது.

இவ்வாய்வுப்பிரதேசத்தில் மீன்பிடித்தொழில் மூலம் சில இடங்களில் சமூகரீதியான கூட்டுறவு என்பது பெரும்பாலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனாலும் இவை இம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் பெரியளவில் செல்வாக்கு செலுத்தியிருக்கவில்லை. குறிப்பாக இம்மக்களின் வருமானத்தை அதிகரிப்பதிலோ, சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவதிலோ, கடன் வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதிலோ முன்னேற்றம் காணப்படவில்லை.அத்துடன் இச்சங்கங்கள் ஊடாக போதுமானளவு ஊக்குவிப்புக்கள், ஆலோசனைகள் என்பவை ஒழுங்கான மற்றும் சரியான முறையில் இக்கிராம மக்களிடையே முன்னெடுக்கப்படவில்லை. இந்நிலமை இம்மீனவ சமூகத்திற்கு பிரதானமான பிரச்சினையாகக் காணப்படுகின்றது என்பதை ஆய்வின் மூலம் கண்டறியமுடிந்தது.

மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்களின் அதிகமானவர்கள் நாளொன்றுக்கு 1000 ரூபாவை விட குறைவான வருமானத்தைப் பெறுகின்றவர்களாக காணப்படுகின்றனர். இவ்வருமானமானது அவர்களது நாளாந்த வாழ்க்கைத் செலவைகூடஈடுசெய்ய போதுமானதாக காணப்படவில்லை. இதனால் இவர்கள் தங்களுக்குரிய வாழ்க்கைச் செலவினை பூர்த்தி செய்வதில் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர் என்பதனையும் ஆய்வின் மூலம் கண்டறிய முடிந்தது.

இம்மக்களின் வாழ்வாதார அபிவிருத்திச் செயன்முறையில் அரச, அரசசார்பற்ற, தனியார் மற்றும் பொது அமைப்புக்களின் பங்களிப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டி எழுப்புவதில் பங்களித்துள்ளன. அம்மீளுருவாக்கச் செயற்பாட்டிற்கான சிறந்த வழிமுறைகள், அதில் பங்கேற்ற பங்குதாரர்கள், அவர்களுக்கான கடைமைகள் மற்றும் பொறுப்புக்களையும் இவ்வாய்வின் மூலம் அறிந்து கொள்ளமுடிந்தது. குற்ப்பாக குளத்தில் சிறிய மீன்குஞ்சுகள் வளர்ப்புக்காக விடப்படுவதனை அறிந்து கொள்ள முடிந்தது.

ஆய்வுப்பிரதேச மக்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் சுய தொழில்கள், சுய தொழில்களுக்கான கடன் வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதைகண்டறிய முடிந்தது. ஆனால் மக்களைப் பொறுத்த வரையில் அதை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதில் காணப்படுகின்ற அக்கறை இன்மைகள், அதாவது கொடுக்கப்பட்ட சுய தொழிலுக்கான வாய்ப்புக்களை கொஞ்ச நாட்களுக்கு பயன்படுத்தி விட்டு பின்னர் சுயதொழிலுக்கான பொருட்களை விற்கின்ற நிலைமைகளும் காணப்படுகின்றன. அதிக மதுபாவனை பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற வாழ்வாதாரங்கள் இவ்வாறாக கொஞ்ச நாட்கள் மட்டும் வாழ்வாதாரத்திற்கு பயன்படுத்தப்பட்டு பின்னர் அவற்றை விற்று மதுசார்ந்த பொருட்களை

வாங்குகின்ற நிலைமைகள் காணப்படுகின்றன. மீனவர்கள் தங்களது வருமானத்தில் அதிகமானளவு பதுபானப்பாவனை செலவுக்காக பயன்படுத்தப்படுவது தெரியவந்தது. மேலும் மக்களுக்கு சுயதொழில் சார்ந்து வழங்கப்படுகின்ற வாழ்வாதார திட்டங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்தப்படுகின்றதா என்று உதவித்திட்டம் வழங்கிய நிறுவனங்களால் முழுமையாக கண்காணிக்கப்படாத நிலைமைகளும் காணப்படுகின்றன,
சமூகத்தில் காணப்படுகின்ற சமூகஅமைப்புக்களிடம் தம் பிரதேசம் சார்ந்த மக்களை ஒண்றினைத்து சுயதொழிலுக்கான ஊக்குவிப்புக்களையும், ஆலோசனைகள், பயிற்சிகள் வழங்குவதில் காணப்படும் அக்கறையின்மைகளும் ஆய்வு பிரதேச மக்களின் சுயதொழில் முயற்சியின்மைகளை அதிகரித்துள்ளது. அத்தோடு கால்நடைகளுக்கான தீவனங்களை பெற்றுக் கொடுக்க, பராமரிக்க மக்களிடம் பணம் மற்றும் போதிய வசதி இல்லாமை போன்ற காரணங்களால் இம்மக்கள் கால்நடை சார்ந்த சுயதொழில் முயற்சிகளில் தோல்வியை சந்திக்கின்றனர்என்பதனையும் ஆய்வின் மூலம் கண்டறிய முடிந்தது.

**5.4ஆய்வுப் பிரதேசத்தின் சிறுவர்கள் மற்றும் பெண்களின் நிலை**

பெண்கள், சிறுவர்கள் மிகவும் இலகுவில் தாக்கப்பட்டு பாதிப்புக்களுக்கும், சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் உட்படக்கூடியவர்கள் என்கின்ற காட்சிநிலைமை தொடர்ந்தவண்ணமே உள்ளன.ஆய்வுப் பிரதேச சிறுவர்கள் மற்றும் பெண்கள்யுத்தத்தின் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்களுக்கு முகங்கொடுத்ததுடன் அதன் தொடர்ச்சியை இன்றும் அநுபவித்து வருபவர்களாக உள்ளனர். உணவு பெற்றுக்கொள்தல் மற்றும் வாழ்வாதாரத்திற்காக பல இன்னல்களை சந்திக்கின்றனர் “this will ensure access to food and protect livelihoods for the poor and the vulnerable, especially women and children (ADB, 9th September 2022).

குறிப்பாகஒரே குடும்பத்தில் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால் உதாரணமாக ஒரு குடும்பத்தில் 5,6 என்ற எண்ணிக்கையில் சிறுவர்கள் காணப்படுகின்றனர். இதனால் அவர்களது அடிப்படைத்தேவைகள் சரிவரப் பூர்த்தி செய்யப்பட முடியாத நிலமையையும், கல்விப் பாதிப்பக்களையும் (சின்னத்தம்பி.க, 2007), அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

யுத்தத்தால் கணவனை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட,மற்றும் குடும்பத்திலுள்ள ஆண்கள் காணாமல் போன குடும்பங்களில் பெண்களே எஞ்சியவர்களாக உள்ளனர். அவர்களே தமது குடும்பத்திற்கான பொருளாதாரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். “Women received much support such as housing assistance, micro-credit loans and psycho-social counselling from state and non-state sectors including NGOs, and UN organizations in the post war period in the Batticaloa district of Eastern Province and such supports have largely been effective as it contributed to women’s empowerment(Rameez. A, 2020).

ஆனால் தற்பொழுது எமது நாட்டையோ அல்லது குறிப்பிட்ட இப்பிரதேசத்தைப் பொறுத்த வரையில் பெண்களுக்கான தொழில் வாய்ப்புகள் குறைவாகவுள்ளது, மற்றும் பெண்களின் உழைப்பிற்கேற்ற ஊதியம் என்பன போதுமானதாக இல்லை.
இலங்கையைப் பொறுத்த வரையில் பொருளாதார வளர்ச்சி சமகாலத்தில் மந்தமானதாக இருப்பதனால் உற்பத்திப் பெருக்கமோ வேலை வாய்ப்போ பாரியளவில் ஏற்படவில்லை. மேலும் ஆய்வுப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் மூன்று தசாப்தகால யுத்தம், சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு போன்றன இப்பிரதேசத்தின் பொருளாதார மூலங்களை பலமுறை அழித்ததுடன் மக்களின் வருமானத்தையும் இழக்கச் செய்திருந்தது. Conflict, economic and political instability, and disasters are often responsible for forced displacement, denial of basic human rights, and deliberate destruction of livelihoods of the people (Korf and Silva 2003). மேலும் தற்போதைய சூழலில் இப்பிரதேசத்தில் தொழிற்சாலைகளோ அல்லது தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத்தரக் கூடிய எதுவித பாரிய செயற்திட்டங்களோ, பொருளாதார மூலங்களோ இல்லாத நிலையில் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்புக்களில் பெண்கள் வேலைக்குச் சென்றாலும் உழைப்புக்கேற்ற ஊதியம் அவர்களுக்கு கிடைக்காமல் போகின்றது. The barriers they have faced in accessing and engaging in employment and livelihood activities. The study concludes that women continue to encounter challenges and restrictions in accessing employment and livelihood opportunities; where they do, they are often in condition of informality and in work that lacks recognition and dignity (ICES, 2022).

மேலும் நாட்டில் தற்போது காணப்படும் பொருளாதார நெருக்கடியின்படி, மக்களின் வருானமானது தங்களது வாழக்கைச் செலவிற்குப் போதுமானதாக இல்லை. இந்நிலையில் நாளாந்தம் உயர்ந்து செல்கின்ற விலைவாசிகளோடு குடும்பங்கள் வாழ்வதற்காகப் போராட வேண்டியவர்களாக உள்ளனர்.

அடிநிலை மக்களின் ஜீவாதாரம் மிக மோசமான வகையில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வேறு பல சமூக நலிவுகளும் ஏற்படுகின்றன. இரத்தல், களவு, வேறு சமூகப்பிறள்வான நடத்தைகளில் ஈடுபடுகின்ற நிலைமைகளையும் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக போதைப்பொருட்கள் கடத்தல் விற்னை, சட்டரீதியற்ற மதுபான உற்பத்திகள்,ஆண்தலைமையற்ற குடும்பப் பெண்கள் சிலர் பாலியல் தொழிலாளர்களாக மாறி வருகின்றமை போன்ற பல பிரச்சினைகளை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. “This was a new finding during a (local) household survey on women headed households and livelihood requirments. They are under immense pressure to provide for families in homes where men are either dead or reported missing it has made a sizeable percentage of women reluctantly turn to sex work” (Turning to sex work in srilanka north, 2013).

அதிகமான இளைஞர்கள் தொழிலற்று இருப்பதனால் அவர்களில் கணிசமானவர்கள் போதைவஸ்துக்களுக்கு அடிமையாகியுள்ளனர் என்பது ஆய்வின் மூலமாக அறிய முடிந்தது. ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்ற பலபகுதிகள் இவ்வாறான செயல்கள் காணப்படுவதாக மக்கள் குறிப்பிட்டனர். இதனால் பெண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பற்ற நிலைமைகளும் காணப்படுகின்றது எனவும் குறிப்பிடுகின்றனர். அத்தோடு பாலியல் ரீதியான தொழில்களும் இங்கு இடம்பெறுகின்றமை தமது சமூகத்தின் நற்பெயரை கெடுப்பதாக இருப்பதுடன், குடும்ப கட்டமைப்புக்கள் சீர்குலைக்கப்படுவதுடன் சமூகத்தையும் சீரழிந்த பாதையில் இட்டுச்செல்கின்றது எனவும் மக்கள் குறிப்பிட்டனர்.

ஒருபுறம் தங்களது பொருளாதார நிலைமைகளினால் இவ்வாறான சூழ்நிலைக்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர், மறுபுறத்தில் சமுதாய ஒழுக்க நியமங்கள், சமூககட்டுப்பாடுகள் என்பன பாதிக்கப்பட்டு சமூகஒழுங்கு சீர்குலைகின்றது என்பதனையும் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது.

நிறுவன ரீதியான உதவிகளின் திருப்தி நிலையினை நோக்கினால், திருப்தியின்மை என்ற பதில்களே அதிகமாக கிடைக்கப்பெற்றன. இவ்வாறான திருப்தியின்மை நிலை என்பது மக்கள் தாங்கள் யுத்தத்தில் இழந்த வாழ்வாதாரங்களை முழுமையாக பெற்றுக் கொள்ளாமையினாலும்,அவர்களுடைய உட்கட்டமைப்பு வசதிகளில் திருப்தியாக கிடைக்கப்பெறாமையினாலும், தொழில் ரீதியில் முன்னேற்றம் அடையாமையாலும், நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற உதவியினால் திருப்தியற்று இருக்கின்றனர். இவ்வாறான குறைவிருத்திகள் இவர்களது வாழ்வாதார மேம்பாட்டை பாதிப்படைய செய்கின்றது.

**5.5ஆய்வுப் பிரதேசத்தின் சுகாதார நிலைமை**

உறுதியான பொருளாதார வளர்ச்சியும் சமூக அபிவிருத்தியும் ஒரு நாட்டிற்குத் தேவையான இன்றியமையாத அம்சங்களாகும். சுகாதாரம் மருத்துவம் போன்றவற்றில் வெற்றி கொள்ள வேண்டுமாயின் சிறப்பான பொருளாதாரமும் அபிவிருத்தியும் அச்சமூகத்தில் காணப்பட வேண்டும். தொழில் இழப்பு என்பது வருமானம் பெறும் அளவினைப் பாதிக்கின்றது. பொருளாதாரப் பற்றாக்குறை நிலவும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட சமூகத்தின் அங்கத்தினர்களது உடல், உள, சமூக ரீதியான விடயங்கள் புறக்கணிக்கப்பட்டுஅவர்களது சுகாதாரமான வாழ்க்கை என்பன பாதிப்புக்குள்ளாவதுடன் சிறுவர்கள், பெண்கள், அங்கவீனர்கள், வறுமையானவர்கள்போன்றோர் தங்களது சிறப்பான உணவு,மருத்துவ சுகாதார எதிர்காலத்திற்காகப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குதள்ளப்பட்டுள்ளனர்என்பதனையும்இப்பிரதேசங்களில் சுகாதார ரீதியான அம்சங்களுக்கான பற்றாக்குறை இன்றும் நிலவுகின்றமையையும் இவ்வாய்வின் மூலம் அறிய முடிந்தது.

சிறுபான்மையினராக, வறுமையானோராக, கல்வி,விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு,சமூகத்தலைமைத்துவம் குறைந்தோராக காணப்படுகின்ற மக்கள் அரசியல் பலமற்றோராகவும் காணப்படுகின்றனர். பல் இன, மொழி, சமய, பண்பாட்டு மக்களையுடைய இலங்கையில் இருக்கக்கூடிய அரசியல் சட்ட ஏற்பாடுகளின் தன்மையும் அவை செயற்படுத்தப்படும் விதமும் சமுதாய முரண்பாடுகள் தோன்ற காரணமாகியுள்ளதுடன்.இன, மத,பிரதேச அடையாளத்துவம் சார்ந்த அரசியல் காரணங்களால் இம்மக்களுடைய வாழ்வியல் அம்சங்களும்,வாழ்க்கைத்தரமும் வாழ்வாதார அபிவிருத்தியும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளதனையும் அறியமுடிந்தது.

**6. முடிவுரை**

மக்களின் பொருளாதார அடிப்படைகள் யுத்தத்தில் முழுமையாக அழிவடைந்ததோடு ஏற்பட்ட இழப்புக்கள் இன்றளவும் அவர்களின் பொருளாதாரத்தில் சவாலாகவே காணப்படுகின்றது. ஆய்வு பிரதேச மக்களின் பிரதான வாழ்வாதார நடவடிக்கையாகக் காணப்பட்ட விவசாயமும் மீன்பிடியும் இன்று சவாலான விடயமாக மாறிவிட்டது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2022, IRJTSR 

ஆய்வுக்குட்படுத்திய பகுதிகளில் விவசாயமும் மீன்பிடியும் முன்னேற்றகரமானதாக அமையாத காரணத்தினால் அவர்களுடைய குடும்பங்களானது பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையை அடைந்துள்ளமையை அறியமுடிந்தது. இதற்கு பிரதானமான காரணியாக வருமானம் குறைவு, சேமிப்பு குறைவு, முதலீடுகள் குறைவு, அவர்களது வாழ்க்கைச் செலவு அதிகம்என்பதனை ஆய்வுத்தரவுகளின் தரவுப்பகுப்பாய்வுகளிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. இதனால் இவர்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தமுடியாதுள்ளது. எதிர்காலத்தில் இங்கு வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் சமூகமேம்பாடுசார் செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களுக்கான ஒரு வழிகாட்டியாக இவ்வாய்வு அமையும் என நம்பப்படுகின்றது.

## உசாத்துணைகள் (References)


[1] அருள்மொழி.செ, (2008),“கல்வி ஆய்வு முறைகள்”, எவகிறீன் பிரிண்டர்ஸ்.

[2] சின்னத்தம்பி.க, (2007),“கல்வி ஆய்வியல்”, சேமமடு பதிப்பகம்.

[3] நந்தகுமார்.வைஇ (2008),“ஆய்வு முறையியலும் நுட்பங்களும்”, பேராதனைப் பல்கலைக்கழகம்.

[4] றொபின்சன்.அ, (2006),“சமூகவியல் கட்டுரைகள்”, பூபாலசிங்கம் புத்தகசாலை.

[5] Frank Ellis (2000) Rural Livelihoods and Diversity in Developing Countries, Oxford University Press

[6] Godfrey, 2002 and M.T.M Rizvi, 2021. International refereed Journal of Tamil Studies, Volume 03, and Issue: 04

[7] Kalinga Tudor Silva, M.G.M Razaak, Dhammika Hearth et al (2018) Postwar Livelihood Trends in Northern and Eastern Sri Lanka, ICES.

[8] News Release, Asian Development Bank (ADB), 9th September 2022.

[9] Rameez. A (2020) Academic Journal of Interdisciplinary Studies, 9 (4), 133 https://doi.org/10.36941/ajis-2020-0068

[10] Sarantakos.S, (1993), “Social Research”, Macmillan education, Australia Pvt ltd.

[11] Suresh Kanesh and Mumthaj Sameem (2018), Post -War Livelihood Development in Batticaloa District, Sri Lanka.




© 2022, IRJTSR